RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




மாலை தந்தி
MALAI THANTHI
தமிழால் வெல்வோம்
DAILY EVENING
www.malaithanthi.in
மாலை நாளிதழ்




சிவகங்கை மலர்-5 இதழ்- 97 ஏப்ரல்.14 2026 செவ்வாய்கிழமை malaithanthi2020@gmail.com 4 பக்கங்கள் விலை ரூ.5

# “ஏப்.16, 17, 18ல் காத்திருப்புக்கு முற்றுப்புள்ளி” மகளிர் இடஒதுக்கீடு சட்டம் குறித்து பிரதமர் மோடி விவரிப்பு

புதுடெல்லி: ஏப்.14-

கடந்த காலக் கனவுகளை நனவாக்கி, எதிர்கால லட்சியங்களை நிறைவேற்றும் என மகளிர் இடஒதுக்கீடு சட்டம் குறித்து பிரதமர் மோடி தெரிவித்தார்.

இந்த வாரம் நாடாளுமன்றத்தில் 33 சதவீத மகளிர் இடஒதுக்கீடு சட்டம் குறித்த விவாதம் நடைபெறவுள்ள நிலையில், இன்று புதுடெல்லியில் நடைபெற்ற பெண் சக்தி வணக்கம் (நாரி சக்தி வந்தன்) கருத்தரங்கில் உரையாற்றிய பிரதமர் மோடி, "நமது நாட்டின் நாடாளுமன்றம் ஒரு புதிய வரலாற்றைப் படைக்கும் தருவாயில் உள்ளது.

மகளிர் இடஒதுக்கீடு சட்டம் கடந்தகால கனவுகளை நனவாக்கும்; எதிர்கால லட்சியங்களை நிறைவேற்றும் ஒரு புதிய வரலாறாகும். சமத்துவமிக்க இந்தியாவுக்கான தீர்மானம் இது. இனி சமூக நீதி என்பது வெறும் முழக்கமாக மட்டும் இல்லாமல், நமது பணி கலாச்சாரம் மற்றும் முடிவெடுக்கும் செயல்முறையின் இயல்பான ஒரு பகுதியாகத் திகழும்.

2023 ஆம் ஆண்டில் மகளிர் இடஒதுக்கீடு சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டபோது, அனைத்துக் கட்சிகளாலும் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. குறிப்பாக எதிர்க்கட்சிகள் தரப்பிலிருந்து, 2029 ஆம் ஆண்டுக்குள் இதை அமல்படுத்த வேண்டும் என்ற கூட்டு கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

மாநிலச் சட்டப்பேரவைகள் முதல் நாட்டின் நாடாளுமன்றம் வரை, பல தசாப்தங்களாக நீடித்த காத்திருப்புக்கு முற்றுப்புள்ளி வைக்கும் நேரம் ஏப்ரல் 16, 17 மற்றும் 18 ஆகிய தேதிகளாகும். இந்தத் தேதிகளில்தான், சட்டத் திருத்தங்களைப் பரிசீலித்து நிறைவேற்றுவதற்காக நீட்டிக்கப்பட்ட பட்ஜெட் கூட்டத் தொடர் திட்டமிடப்பட்டுள்ளது.



2023ஆம் ஆண்டில், புதிய நாடாளுமன்றத்தில், 'நாரி சக்தி வந்தன் சட்டம்' என்ற வடிவில் நாம் முதல் அடியை எடுத்து வைத்தோம். நமது தேசத்தின் வளர்ச்சிப் பயணத்தில் உள்ள இந்தக் குறிப்பிடத்தக்க மைல்கற்களுக்கு மத்தியில், 21ஆம் நூற்றாண்டின் மிக முக்கியமான முடிவுகளில் ஒன்றை எடுக்கும் தருவாயில் இந்தியா இன்று நிற்கிறது.

இந்த முடிவு, நமது காலத்தின் மிக முக்கியமான முடிவுகளில் ஒன்றாகத் திகழும் என்பதை நான் மிகுந்த பொறுப்புணர்வுடன் கூறுகிறேன். இது பெண்களின் அதிகாரமளித்தலுக்காக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு முடிவாகும். இது பெண்மையின் வலிமைக்கும் கண்ணியத்துக்கும் செலுத்தப்படும் ஓர் உண்மையான மரியாதையாகும்.

பெண்கள் இட ஒதுக்கீடு சட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ள திருத்தங்கள் நிறைவேற்றப்படும்போது, மக்களவை இடங்களின் எண்ணிக்கை 816 ஆக உயருவது உறுதி செய்யப்படும். இதில் 273 இடங்கள் பெண்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும்” என்றார்.

**காங்கிரஸ் சொல்வது என்ன?**

முன்னதாக, பிரதமர் நரேந்திர மோடிக்கு காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே எழுதியுள்ள கடிதத்தில், ‘மகளிர் இடஒதுக்கீடு சட்டம் 2023ம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டது. உடனடியாக சட்டத்தை அமல்படுத்த வேண்டும் என்று அப்போதே வலியுறுத்தினேன். சட்டம் நிறைவேற்றப்பட்டு 30 மாதங்களுக்குப் பிறகு திடீரென நாடாளுமன்ற சிறப்பு கூட்டம் கூட்டப்படுகிறது. ஆனால் மகளிர் இடஒதுக்கீடு சட்டம் குறித்து எதிர்க் கட்சிகளுடன் எவ்வித ஆலோசனையும் நடத்தப்படவில்லை.

தற்போது நீங்கள் எழுதியிருக்கும் கடிதத்தில் தொகுதி மறுவரையறை குறித்து எந்த தகவலும் இடம்பெறவில்லை. இந்தச் சூழலில் வரலாற்று சிறப்புமிக்க மகளிர் இடஒதுக்கீடு சட்டம் குறித்து ஆக்கப்பூர்வமான விவாதத்தை நடத்துவது சாத்தியமில்லை. தற்போது பல்வேறு மாநிலங்களில் தேர்தல் நடத்தப்படுகிறது.

இந்த தேர்தல்கள் முடிந்த பிறகு ஏப்ரல் 29ம் தேதி அனைத்துக் கட்சி கூட்டத்தை நடத்த வேண்டும். அதில் மகளிர் இடஒதுக்கீடு சட்டம் தொடர்பான அரசியலமைப்பு சட்ட திருத்தங்கள் குறித்து விவாதிக்க வேண்டும். மகளிருக்கான இடஒதுக்கீட்டை அதிகரிக்க திடீரென நாடாளுமன்ற சிறப்பு கூட்டத்தை கூட்டியிருப்பது அரசியல் ஆதாயம் தேடும் முயற்சி ஆகும்’ என்று கார்கே தெரிவித்துள்ளது கவனிக்கத்தக்கது.



## பட்டாசு ஆலை விபத்து: ரூ.10 லட்சம் நிதியுதவி வழங்க நயினார் நாகேந்திரன் வலியுறுத்தல்

சாத்தூர்: ஏப்.14-

“பட்டாசு ஆலை விபத்துகளில் பாதிக்கப்படுவோருக்கு ரூ.10 லட்சம் நிதி உதவி வழங்க வேண்டும். இதற்காக சட்டப்பேரவையில் நான் நிச்சயம் குரல் கொடுப்பேன். இதுபோன்ற விபத்துகளால் சாத்தூர் தொகுதியை சபிக்கப்பட்ட தொகுதியாகத் தான் நான் நினைக்கிறேன்,” என்று தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் வலியுறுத்தினார்.

வெம்பக்கோட்டை அருகே வெடி விபத்து ஏற்பட்ட பட்டாசு ஆலையை பாஜக வேட்பாளர் நயினார் நாகேந்திரன் பார்வையிட்டார். அப்போது அவர் அளித்த பேட்டியில், இது போன்ற ஒரு பட்டாசு விபத்து நடப்பதை, இப்போது தான் முதல் முறையாக பார்க்கிறேன். இந்தப் பகுதி வானம் பார்த்த பூமி. இப்பகுதி மக்களின் வாழ்வாதாரம் பட்டாசு தொழில் தான்.

அரசு அதிகாரிகளின் நெருக்கடி அதிகமாக உள்ள காரணத்தால்தான் தொழிலாளர்களை அவசரப்படுத்தி வேலை வாங்குகின்றனர். இதுபோன்ற சூழ்நிலையால் தான் விபத்து நடக்கிறது என்பதை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. அரசு அதிகாரிகள் எடுக்கக்கூடிய தீவிர நடவடிக்கையும் இதற்கு ஒரு காரணம். அரசு அதிகாரிகள் பட்டாசு தொழிலாளர்களை துன்புறுத்துவதாகத்தான் நான் நினைக்கிறேன்.

இந்தப் பகுதியில் இத்தொழிலை விட்டால் மக்களுக்கு வேறு தொழில் கிடையாது. இதனால் மாநில அரசாங்கம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டு, இதுபோன்ற தொந்தரவுகளை அதிகம் செய்யக்கூடாது என அறிவுறுத்த வேண்டும். நான் வெற்றி பெற்றதும் இது தொடர்பாக சட்டமன்றத்தில் பேசுவேன். இதுபோன்று எதிர்பாராத விதமாக வெடி விபத்து நடக்கும் போது காயம் அடைந்தவர்களை சிவகாசி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல வேண்டி உள்ளது.

அவசரமாக செல்லும் நிலையில் சிவகாசியில் போக்குவரத்து நெரிசலில் சிக்கிக் கொள்ள வேண்டிய சூழ்நிலையும் உள்ளது. அதனால் வெம்பக்கோட்டை பகுதியிலேயே சிகிச்சைக்காக ஒரு மருத்துவமனையை கொண்டு வர நான் முயற்சிப்பேன், குரல் கொடுப்பேன். அரசு அதிகாரிகள் பட்டாசு ஆலை தொழிலாளர்களை நிம்மதியாக வேலை பார்க்க விட வேண்டும். ஆலை உரிமையாளர்களையோ தொழிலாளர்களையோ விரைவு படுத்தி, அவர்களை இக்கட்டான சூழ்நிலைக்கு தள்ளக்கூடாது. அரசு இதில் தனி கவனம் செலுத்த வேண்டும்.

பட்டாசு விபத்துகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ.10 லட்சம் நிதி உதவி வழங்க வேண்டும். இதற்காக சட்டமன்றத்தில் நான் நிச்சயம் குரல் கொடுப்பேன். முதல்வரிடம் கூறி கண்டிப்பாக உரிய நிதி உதவியை பெற்றுக் கொடுப்பேன். இதுபோன்ற விபத்துகளால் சாத்தூர் தொகுதியை நான் சபிக்கப்பட்ட தொகுதியாகத் தான் நான் நினைக்கிறேன்.

நான் வந்த போது மிக மோசமாக இருந்ததை உணர்ந்தேன். குடிப்பதற்கு சுத்தமான குடிநீர் இல்லை. சாலை வசதி இல்லை. குக்கிராமங்களுக்கு பேருந்து வசதி இல்லை. இந்த நேரத்தில் அரசை நான் குற்றம் சாட்ட விரும்பவில்லை. வரும் காலத்தில் என்ன தேவையோ அதை செய்து கொடுப்பேன் என்று கூறினார்.

present sale for all over Tamil Nadu

தற்பொழுது தமிழகமெங்கும் விற்பனையாகி வருகிறது

## “கடிதத்தில் இல்லாத எதையும் நான் பேசவில்லை...” நிர்மலா சீதாராமனுக்கு ஸ்டாலின் பதிலடி

சென்னை: ஏப்.14-

“நெல் சாகுபடிக்கு ஊக்கத் தொகை வழங்க வேண்டாம் என்று தமிழகத்துக்கு மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது,” என முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியிருப்பது திசை திருப்பும் செயல் என மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் குற்றஞ்சாட்டி இருந்தார். இந்நிலையில்,“தங்கள் அமைச்சகம் அனுப்பிய கடிதத்தில் இல்லாத எதையும் நான் பேசவில்லை. அப்படி, பேசவேண்டிய அவசியமும் எனக்கு இல்லை. தங்களது கூற்று உண்மைதானென்றால், அந்தக் கடிதத்தைப் பொதுவில் வெளியிடத் தாங்கள் தயாரா?,” என்று நிர்மலா சீதாராமனுக்கு முதல்வர் ஸ்டாலின் சவால் விடுத்துள்ளார்.

இது குறித்து முதல்வர் ஸ்டாலின் தனது சமூக வலைதள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், “நெல்லுக்குத் தமிழக அரசு வழங்கும் ஊக்கத் தொகையால்



விளைச்சல் பெருகிக் கொண்டே போகிறது. எனவே, இந்த ஊக்கத் தொகையை நிறுத்த வேண்டும்” எனத் தமிழக அரசு தலைமைச் செயலாளருக்குத் தங்களின் அமைச்சகம் அனுப்பிய கடிதத்தில் மிகத் தெளிவாகவே உள்ளது.

கடிதத்தில் இல்லாத எதையும் நான் பேசவில்லை. அப்படி, பேச வேண்டிய அவசியமும் எனக்கு இல்லை. எங்களுக்கு அனுப்பிய கடிதத்தில், தற்போது மாநில அரசால் தரப்படும் ஊக்கத் தொகையை மறு பரிசீலனை செய்யுமாறும், நெல்லுக்கு இத்தகைய ஊக்கத் தொகை வழங்குவதை நிறுவத்துவது தொடர்பாகப் பரிசீலனை செய்யவும் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளீர்கள்.

தங்களுடைய இந்தப் பதிவில், "குறைந்தபட்ச ஆதார விலையைத் தாண்டி ஊக்கத் தொகை வழங்குவது மாநில அரசின் முடிவு எனவும், அதனை யாரும் பறிக்கவில்லை" என்றும் கூறியிருக்கிறீர்கள். தங்களது கூற்று உண்மைதான் என்றால், அந்தக் கடிதத்தைப் பொதுவில் வெளியிடத் தாங்கள் தயாரா ?” என்று முதல்வர் சவால் விடுத்துள்ளார்.

முன்னதாக, “நெல் சாகுபடிக்கு ஊக்கத் தொகை வழங்க வேண்டாம் என்று மத்திய அரசு தமிழகத்திற்கு உத்தரவிட்டுள்ளதாக தமிழக முதல்வர் ஸ்டாலின் சுமத்தியுள்ள குற்றச்சாட்டு முற்றிலும் உண்மைக்கு புறம்பான, அரசியல் உள் நோக்கம் கொண்ட, தமிழக விவசாயிகளை திசை திருப்பும் நோக்கில் திட்டமிட்டு உருவாக்கப்பட்ட ஒரு திரிபு,” என்று நிர்மலா சீதாராமன் கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## “திமுக, அதிமுகவுக்கு மக்களை வாழ விடவேண்டும் என்ற எண்ணம் துளி கூட இல்லை” : சீமான்

திண்டுக்கல்: ஏப்.14-

“இந்த நாட்டையும், நாட்டு மக்களையும் வாழ விட வேண்டும் என்ற துளிகூட எண்ணம் இல்லாத கட்சிகள்தான் திமுக, அதிமுக” என நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் பேசினார்.

திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூர் தொகுதி நாம் தமிழர் கட்சி வேட்பாளர் காஜா உசேன் அகமதுவை ஆதரித்து எரியோட்டில் அக்கட்சியின் மாநில ஒருங்கிணைப்பாளர் சீமான் பேசியது: “இந்தியாவை யார் ஆள்வது என்ற போட்டி வரும்போது இந்த கட்சிகள் பாஜக மற்றும் காங்கிரஸோடு கூட்டணி வைத்துக் கொள்கின்றன.

தமிழ்நாட்டை யார் ஆள்வது என்ற போட்டி வரும்போது திமுக மற்றும் அதிமுக ஊழல் கட்சிகளோடு பாஜக மற்றும் காங்கிரஸ் கூட்டணி வைத்துக் கொள்கிறது.

தமிழ்நாட்டை அதிமுக மற்றும் திமுக ஆகிய இரு கட்சிகளும் 60 ஆண்டுகளாக மாறி மாறி ஆட்சியை செய்து கொண்டிருக்கின்றன. போட்டி போட்டுக் கொண்டு ஊழல்




லஞ்சத்தை பெருக்குவதிலும், இயற்கை வளங்களை கொள்ளை அடிப்பதிலும், மக்களின் நலங்களை கெடுப்பதிலும் இந்த இரு பெரும் கட்சிகளும் போட்டி போட்டுக் கொண்டு தமிழ்நாட்டில் ஆட்சியை நடத்தி வருகின்றன.

இந்த நாட்டையும் நாட்டு மக்களையும் வாழ விட வேண்டும் என்ற துளி கூட எண்ணம் இல்லாத கட்சிகள்தான் இவை. விவசாயிகள் இன்றும் போராடிக் கொண்டுதான் இருக்கிறார்கள். மீனவர்களுக்கு தொடர்ந்து பிரச்சினைகள் இருந்து கொண்டே இருக்கிறது.


கல்வியை கொடுப்பதை தவிர அரசுக்கு என்ன வேலை இருக்கிறது. ஏன் இந்த அரசு மாணவர்களுக்கு கல்வியை இலவசமாக வழங்கக் கூடாதா?.

கல்வி, மருத்துவம் மற்றும் தண்ணீர் இங்கு வியாபாரம் ஆக்கப்பட்டுள்ளது. மலையை வெட்டி எடுப்பதையும், மணலை கொள்ளையடிப்பதையும் மக்கள் வேடிக்கை பார்க்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

நரி, ஆடுகளை பட்டியலில் அடைத்து வைத்து நான் வெற்றி பெற்றால் உங்கள் அனைவருக்கும் போர்வை தருவேன் என்று கூறி தேர்தலில் வெற்றி பெற்று முதல்வர் ஆனது. அதன் பிறகு சக நரிகளைக் கொண்டு அனைத்து ஆடுகளின் தோல்களை உரித்தது. அதற்கு ஆடுகள் ஏன் இப்படி செய்கிறீர்கள் என்று கேட்டதற்கு, உங்களுக்கு போர்வை தரப் போறேன். அதற்காக உங்கள் தோலை உரிக்கிறோம் என்றது.

அனைத்து வளமும் உள்ள தமிழ்நாட்டில் பசி இருக்கிறது, வறுமை இருக்கிறது, பட்டினி இருக்கிறது. மதுக்கடைகளை மூடுவேன். இயற்கையான முறையில் தொழிற்சாலைகள் அமைத்து அரசுக்கு பலவகையில் வருமானங்கள் தேடிக் கொடுப்பேன். சாதி பார்க்காமல் சாதிக்க துடிக்கின்ற நல்ல மனிதனான வேடசந்தூர் சட்டமன்றத் தொகுதி நாம் தமிழர் கட்சி வேட்பாளர் உசேனுக்கு விவசாயி சின்னத்திற்கு வாக்களிக்க வேண்டும்” என்றார் சீமான்.

# குன்னூரில் தந்தி மாரியம்மன் கோவிலில் 50வது பூகுண்டம் விழா



நீலகிரி, ஏப்.14-
நீலகிரி மாவட்டம் குன்னூரில் அமைந்துள்ள தந்தி மாரியம்மன் கோவிலில் நடைபெற்று வரும் சித்திரை தேர்த்திருவிழாவின் ஒரு பகுதியாக, பாரம்பரிய சிறப்புமிக்க 50வது பூகுண்டம் இறங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்று, பக்தி உற்சாகத்தில் நேர்த்திக்கடனை செலுத்தினர்.

கடந்த 3ஆம் தேதி தொடங்கிய இந்த திருவிழா தினமும் பல்வேறு ஆன்மிக நிகழ்ச்சிகளுடன் சிறப்பாக நடைபெற்று வருகிறது. அதன் முக்கிய நிகழ்வாக கருதப்படும் பூகுண்டம் இறங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

மாலை நேரத்தில் தந்தி மாரியம்மன் கோவிலில் இருந்து அம்மன் ஊர்வலம் பக்தர்களின் கோஷங்களுடன் துவங்கி, நகரின் முக்கிய வீதிகள் வழியாகச் சென்று, இரவு 6:30 மணியளவில் சுப்ரமணியர் சுவாமி கோவிலை அடைந்தது. அங்கு சிறப்பு பூஜைகள், தீபாராதனைகள் நடைபெற்றன.

பின்னர், பூகுண்டம் நிகழ்ச்சி தொடங்கியது. முன்கூட்டியே ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பூகுண்டத்தில், பக்தர்கள் வரிசையாக நின்று பக்தி பூர்வமாக இறங்கினர். பலர் தங்களது கைக்குழந்தைகளை தூக்கிக்கொண்டு பூகுண்டம் இறங்கி நேர்த்திக்கடனை நிறைவேற்றியது காண்போருக்கு பக்தி உணர்வையும் ஏற்படுத்தியது.

இந்நிகழ்ச்சிக்காக பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டிருந்தன. காவல்துறையினர் மற்றும் விழா குழுவினர் இணைந்து, பக்தர்கள் பாதுகாப்பாக பூகுண்டம் இறங்குவதற்கான அனைத்து வசதிகளையும் செய்திருந்தனர்.

# வெள்ளிமலை வனப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடி மையத்தினை தேனி மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர்.ரஞ்ஜீத் சிங், நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்



தேனி ஏப்.14-
தமிழ்நாடு சட்டமன்றத் பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு, தேனி மாவட்டம், 198.ஆண்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வெள்ளிமலை வனப்பகுதியில் உள்ள துரைச்சாமி மரகதம் ஆரம்பப்பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடி மையத்தில் அடிப்படை வசதிகள் குறித்து மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்டஆட்சித்தலைவர்.ரஞ்ஜீத் சிங், நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026 ஐ முன்னிட்டு தேனி மாவட்டத்தில் உள்ள 198.ஆண்டிபட்டி, 199. பெரியகுளம் (தனி), 200.போடிநாயக்கனூர் மற்றும் 201.கம்பம் ஆகிய 4 சட்டமன்றத் தொகுதிகளுக்கு வருகின்ற 23.04.2026 அன்று தேர்தல் நடைபெற உள்ளது.

மேற்குத்தொடர்ச்சி மலைப் பகுதியின் பசுமையான எழில் சூழ்ந்த பகுதியில் ஏலக்காய் மற்றும் காப்பித்தோட்டத்தில் பணியாற்றும் தொழிலாளர்கள் வெள்ளிமலை வனப்பகுதியில் வாழ்கிறார்கள். தற்போது, இந்தப் பகுதியில் 5 வாக்காளர்கள் வாக்களிக்க உள்ளனர். தரையிலிருந்து உயரமான இடத்தில் அமைந்திருக்கும் முக்கிய வாக்குச்சாவடிகளில் இதுவும் ஒன்று. இப்பகுதிக்கு மிக அடர்ந்த வனப்பகுதியில் மமைந்துள்ளது.

வாக்குச்சாவடி மையங்களில் அடிப்படை வசதிகளை உறுதி செய்ய இந்திய தேர்தல் ஆணையத்தால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி, 198. ஆண்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வருசநாடு வெள்ளிமலை வனப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடி மையத்தினை மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, 100 சதவீதம் வாக்குப்பதிவை வலியுறுத்தி பொது மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

மேலும், வாக்குச்சாவடி மையத்தின் அடிப்படை வசதிகள் குறித்தும், பழுதுகள் ஏதேனும் இருந்தால், அதனை உடனடியாக சரிசெய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற் கொள்ளுமாறும் அலுவலர்களுக்கு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுறுத்தினார்.

இவ்வாய்வின்போது, உதவி வன அலுவலர் (பயிற்சி) என்.ஆர்.புவனேஷ், மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்.ஏ.எடிசன், வட்டாட்சியர் (ஆண்டிபட்டி). ஜாஹிர் உசேன், வட்டார வளர்ச்சி அலுவலர் சேதுராமன் உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.

# குன்னூர் தாலுகாவில் ஆய்வு கூட்டம்



நீலகிரி, ஏப்.14-
நீலகிரி மாவட்டம் குன்னூர் தாலுகாவிற்குட்பட்ட வெலிங்டன் கண்டோன் மெண்ட் நகரிய செயலாளர் மார்டின் தலைமையில்கண்டோண்மெண்ட் நகரிய அலுவலகத்தில் ஆய்வு கூட்டம் நடைபெற்றது இக் கூட்டம் கண்டோன்மெண்ட் நகரிய தேர்தல பொறுப்பாளர் , மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் வினோத் முன்னிலை வகித்தார் கூட்டத்தில் நகரிய செயலாளர் மார்டின் ,மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் கண்டோன்மெண்ட் நகரிய தேர்தல் பொறுப்பாளராக நியமிக்கப்பட்ட வினோத் (குன்னூர்)இருவரும் கலந்துரையாடி வருகின்ற 2026 சட்ட மன்ற தேர்தலில் நமது குன்னூர் சட்ட மன்ற தொகுதியின் வெற்றி வேட்பாளரான கே.எம்.ராஜூ வெற்றி பெற வைப்பதை குறித்த கலந்துரையாடல் நடைபெற்றது இக் கூட்டத்தில் கண்டோண்மெண்ட் நகரிய இளைஞர் அணி அமைப்பாளர் ரகுநாதன் அனைவரையும் வரவேற்றார்கூட்டத்தில் நகரிய துணை செயலாளர்கள் ஜோசப் ஜெரால்ட் கிளாரா பிரேம்குமார் நகரிய பொருளாளர் பாலன் பூத் பொறுப்பாளர்கள் ஜோசப் ராஜா வெலிங்டன் பி.எல்.ஏ 2நிர்வாகிகள் ஞானவரம், ஜெபமாலை (வசந்த்) அகிலேஷ்வரன்சுரேஸ் பாபுதினேஷ் மற்றும் கழக நிர்வாகி, கார்த்திக் மற்றும் அனைவரும் கலந்து கொண்டனர்.

இறுதியில் நகரிய துனை செயலாளர் ஜோசப் ஜெரால்ட் நன்றி உரை கூறினார்



# கால்பந்தாட்ட வீரர்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரிப்பு

மாதவரம், ஏப்.14-
திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் சட்டமன்ற தொகுதி மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி திமுக வேட்பாளரும் சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளருமான எஸ்.சுதர்சனத்திற்கு வில்லிவாக்கம் வடக்கு ஒன்றியம் பம்மதுகுளம் ஊராட்சி கோணிமேடு ரவுண்டானா அருகே உள்ள விளையாட்டு திடலில் திமுக விவசாய அணி சார்பில் கால்பந்தாட்ட வீரர்களுடம் வில்லிவாக்கம் வடக்கு ஒன்றிய செயலாளர் கோ.தயாளன் மற்றும் வில்லிவாக்கம் வடக்கு ஒன்றிய விவசாய அணி அமைப்பாளர் எஸ்.சங்கர், துணை அமைப்பாளர் கே.ரவி மற்றும் திமுக நிர்வாகிகள் திருநாவுகரசு, பத்மநாபன், அண்ணாதுரை, ராமகிருஷ்ணன், கிருஷ்ணன், நாகராஜ், ராமதாஸ், கவியரசன், ராஜேஷ், சதீஷ்,,சுபாஷ், சூரியா, குமார் உள்ளிட்ட பொறுப்பாளர்கள் உதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரித்தனர்.



# திமுக வேட்பாளருக்கு பிரம்மாண்டமாக வரவேற்பு

மாதவரம், ஏப்.14-
திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் சட்டமன்ற தொகுதி மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி வேட்பாளரும சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளருமான எஸ்.சுதர்சனத்திற்கு புழல் ஒன்றிய பொறுப்பாளர் அற்புதராஜ் தலைமையில் புழல் ஒன்றியம் வடகரை ஊராட்சி வ.ஊ.சி தெருவில் வாக்காளர்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரித்தனர். அப்போது புழல் ஒன்றிய துணை செயலாளர் இரா. முருகன் பட்டாசு வெடித்து வேட்பாளருக்கு பொன்னாடை போர்த்தி மலர்மாலை அணிவித்தும் பெண்கள் ஆரத்தி எடுத்து பிரம்மாண்டமாக வரவேற்பு அளித்தனர். இதில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகள் உடனிருந்தனர்.



■ பர்கூர் தொகுதி திமுக வேட்பாளர் மதியழகன் எம் எல் ஏ., பர்கூர் நகரப் பகுதி, டெக்ஸ்டைல் மார்க்கெட் பகுதிகளில் தீவிர தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்ட போது சாலையோரம் இருந்த ஒரு கடையில் குழிப்பணியாரம் சுட்டுக்கொடுத்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார்.



■ நிலக்கோட்டை திமுக தெற்கு ஒன்றிய செயலாளர் மணிகண்டன் கழக வேட்பாளர் எஸ் நாகஜோதி அவர்களுக்கு பள்ளபட்டி கரட்டுப்பட்டி ஆவாரம்பட்டி பகுதிகளில் வாக்குகள் சேகரித்தார் பள்ளபட்டி திமுக பொறுப்பாளர் லலிதா மணிகண்டன் துணை ஒன்றிய செயலாளர் வெள்ளிமலை விசிக மைய மாவட்ட செயலாளர் பிரகாஷ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்



# கிரிக்கெட் வீரர்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரிப்பு

மாதவரம், ஏப்.14-
திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் சட்டமன்ற தொகுதி மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி திமுக வேட்பாளரும் சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளருமான எஸ்.சுதர்சனத்திற்கு வில்லிவாக்கம் வடக்கு ஒன்றியம் பம்மதுகுளம் ஊராட்சி கோட்டீஸ்வரன் நகரில் உள்ள விளையாட்டு திடலில் திமுக இளைஞரணி சார்பில் ஏழு அணி சார்ந்த கிரிக்கெட் வீரர்களுக்களிடம் வில்லிவாக்கம் வடக்கு ஒன்றிய செயலாளர் கோ. தயாளன் மற்றும் முன்னாள் ஒன்றிய அவைத்தலைவர் பா.ராமகிருஷ்ணன், வில்லிவாக்கம் வடக்கு ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் கவியரசன் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் ராஜேஷ், நரேஷ், சதீஷ், தீபன், முருகன், சரவணன், நரேந்திரன், திருநாவுகரசு, பத்மநாபன், அண்ணாதுரை உள்ளிட்ட உதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரித்தனர். இதில் கிரிக்கெட் அணி தலைவர்கள் ராஜசேகர், அருண், தமிழரசன், மணி, செல்வம், விக்கி, சஞ்சய் உள்ளிட்ட கிரிக்கெட் விளையாட்டு வீரர்கள் உடனிருந்தனர்.

# பெரியகுளம் சட்டமன்ற தொகுதி அனைத்து தரப்பு மக்களின் பாதுகாவலனாக இருப்பேன்



தேனி ஏப்.14-
தேனி மாவட்டம் பெரியகுளம் சட்டமன்றத் தொகுதி மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியின் விசிக வேட்பாளர் பெ.சக்திவேல் சில்வார்பட்டி, நாகம்பட்டி , சில்வார்பட்டி காலனி, அழகர்நாயக்கன்பட்டி, நல்லகருப்பன்பட்டி , வேல்நகர், காமாட்சிபுரம் , எண்டபுளி புதுப்பட்டி, முருகமலை நகர், நேரு நகர், ஆரோக்கிய மாதா நகர் , பெருமாள்புரம்,கரட்டூர் , அழகர்சாமிபுரம் உள்ளிட்ட பகுதிகளில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார் . அப்போது பேசுகையில் கடந்த ஐந்தாண்டு காலங்களில் திராவிட முன்னேற்ற கழகம் செய்த அரசின் நலத்திட்டங்கள் சாதனைகளை எடுத்துக் கூறியும் தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள திட்டங்களை எடுத்துக் கூறியும் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார் . மேலும் எதிர்வரும் ஏப்ரல் 23ம் தேதி தேர்தல் வாக்குப்பதிவு நாள் அன்று அனைத்து தரப்பு மக்களும் பானை சின்னத்திற்கு வாக்களியுங்கள். நான் பெரியகுளம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அனைத்து பகுதிகளைச் சேர்ந்த அனைத்து தரப்பு மக்களின் பாதுகாவலனாக இருந்து மக்கள் பணி ஆற்றுபவேன் . அரசின் திட்டங்கள் யாவும் மக்களுக்கு எளிதில் கிடைக்கும் வகையில் நானே முன்நின்று அனைத்தையும் செயல்படுத்துவேன்.இந்த தேர்தல் பிரச்சாரத்தின் போது தேனி வடக்கு மாவட்ட செயலாளரும், தேனி பாராளுமன்ற உறுப்பினருமான தங்க தமிழ்ச்செல்வன்.மாநில உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினர் எல். மூக்கையா,பெரியகுளம் வடக்கு ஒன்றிய திமுக செயலாளர் எல். எம் பாண்டியன்,பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் சரவணகுமார்,விசிக சட்டமன்றத் தொகுதி மாவட்ட செயலாளர் சுசி.தமிழ் பாண்டி ,மாநிலத் துணைப் பொதுச் செயலாளர் கனியமுதன், விசிக தொகுதி மேற்பார்வையாளர் வில்லவன் கோதை,மதுரை மாவட்ட மண்டல செயலாளர் கார்வண்ணன்,முன்னாள் மண்டல செயலாளர்கள் தமிழ்வாணன்,தேனி மண்டல செயலாளர் ரபீக்,மண்டல துணைச் செயலாளர்கள் நாகரத்தினம்,தமிழன் ,மாநில தேர்தல் பணிக்குழு துணைச் செயலாளர் ஆண்டி உள்பட மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# 32வது(அ) வார்டில் திமுக வேட்பாளர் எஸ்.சுதர்சனத்திற்கு பிரம்மாண்டமான வரவேற்பு

மாதவரம், ஏப்.14-

திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் சட்டமன்ற தொகுதி மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி திமுக வேட்பாளரும் சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளருமான எஸ்.சுதர்சனத்திற்கு 32வது(அ) வார்டு வட்ட செயலாளர் துரை ஸ்ரீராமலு தலைமையில் 32வது வார்டு மாமன்ற உறுப்பினர் ஏழுமலை முன்னிலையில் 32வது(அ) வார்டு அனைத்து பகுதிகளில் உள்ள வாக்காளர்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரித்தார். அப்போது மாவட்ட பிரிதிநிதி ரமணன், பகுதி துணை செயலாளரும் சமுதாய வள பயிற்சியாளருமான விஜயலட்சுமி ஆனந்த், விசிக சங்கர் உட்பட கூட்டணி கட்சி நிர்வாகிகள் பிரம்மாண்டமாக வரவேற்பு அளித்தனர். இதில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி பொறுப்பாளர்கள் உடனிருந்தனர்.



# தாம்பரம் சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் மருத்துவர் ஆர்.எஸ்.கிருத்திகாதேவி ஆதரித்து தீவிரவாக்கு சேகரிப்பு

தாம்பரம் ஏப். 14-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மேற்கு பகுதியில் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா தலைமையில்

தாம்பரம் சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் மருத்துவர் ஆர்.எஸ். கிருத்திகாதேவி ஆதரித்து தீவிரவாக்கு சேகரிப்பு.

தாம்பரம் மாநகரம், தாம்பரம் மேற்கு பகுதிக்கு உட்பட்ட 62 வது வட்டத்தில் உள்ள பழைய ஜிஎஸ்டி சாலை இரும்புலியூர் காயத்ரி நகரில் இருந்து புறப்பட்டு 63,48,47,46,45,64, ஆகிய வட்டங்களில், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி, சார்பில் போட்டியிடும் தாம்பரம் சட்டமன்றத் தொகுதி கழக வெற்றி வேட்பாளர் டாக்டர் கிருத்திகா தேவி அவர்கள், அனைத்து, வார்டுகளிலும், முக்கிய வீதிகளில் வாகன பிரச்சாரத்தில் ஊர்வலமாக சென்று வாக்குகள் சேகரித்தார். உடன் மாநகர மேயர், க.வசந்தகுமாரி, பகுதி கழக செயலாளர் மண்டல தலைவர் எஸ்.இந்திரன், பெருங்களத்தூர் வடக்கு பகுதி செயலாளர் மண்டல தலைவர் டி.காமராஜ் மற்றும் மதச்சார்பற்ற கூட்டணி கட்சிகளின் தலைவர்களும், வட்டக் கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், நிர்வாகிகள் இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி உள்ளிட்ட மாவட்ட, மாநகர, பகுதி, வட்டக் கழக அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பொதுமக்கள் என பெரும் திரளாக கலந்து கொண்டனர்.






■ பர்கூர் சட்டமன்றத் தொகுதியில், திமுக வேட்பாளரும் கிழக்கு மாவட்ட செயலாளருமான மதியழகன் எம்.எல்.ஏ. முன்னிலையில் 40க்கும் மேற்பட்ட முதல்முறை வாக்காளர்கள் திமுகவில் இணைந்தனர்.



■ தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல்2026ஐ முன்னிட்டு, 100% தேர்தல் வாக்குப்பதிவை வலியுறுத்தி திண்டுக்கல் சட்டமன்ற தொகுதி மேற்கு மரியநாதபுரத்தில் வாக்காளர்களுக்கு வெற்றிலை, பாக்கு, பழம், அழைப்பிதழ் மற்றும் வாக்காளர் தகவல் சீட்டு மற்றும் விழிப்புணர்வு துணிப்பை ஆகியவைகளை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் செ.சரவணன், வீடு, வீடாக சென்று வழங்கி, வாக்காளர் தகவல் சீட்டு வழங்கும் பணியை தொடங்கி வைத்தார். அருகில் திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் கோ.பழனிவேல் உட்பட பலர் உள்ளனர்.



■ கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் அண்ணல் அம்பேத்கர் அவர்களுடைய பிறந்த நாளை முன்னிட்டு, சமத்துவ நாள் உறுதிமொழியை மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் தலைமையில் அனைத்து அரசு துறை அலுவலர்கள் எடுத்துக்கொண்டனர். உடன், மாவட்ட வருவாய் அலுவலர் சாதனைக்குறள், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் கிருஷ்ணன் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# மக்கள் பணியாற்றுபவர்களை அடையாளம் கண்டு ஆதரியுங்கள்அ.தி.மு.க. வேட்பாளர் கே.பி.முனுசாமி பிரசாரம்

கிருஷ்ணகிரி, ஏப்.14-

வேப்பனப்பள்ளி தொகுதி அ.தி.மு.க. வேட்பாளர் கே.பி.முனுசாமி நேற்று கோனேரிப்பள்ளி, காமன் தொட்டி, கானலட்டி, பீர் ஜேப்பள்ளி, புக்கசாகரம், தோரிப்பள்ளி, சானமாவு, கொம்மேப்பள்ளி, உத்தனப் பள்ளி உள்பட 40க்கும் மேற்பட்ட கிராமங்களில் நேற்று பிரசாரம் செய்து ஆதரவுதிரட்டினார். அப்போது அவர் பேசியதாவது:

சாதி இல்லை,மதம் இல்லை என்பதே அ.தி.மு.க.வின் கொள்கை,ஆனால் இப்போது புதிதாக சிலர் அரசியலுக்கு வந்து உள்ளார்கள். அவர்கள் சாதியை கூறி பிரிக்க நினைக் கிறார்கள். நான் 50 ஆண்டுக ளாக அரசியலில் உள்ளேன். பதவி என்றால் என்ன என்று தெரியாத காலத்திலேயே வந்தவன். இன்று சிலர் வந்த உடன் முதல் அமைச்சர் ஆக நினைக்கிறார்கள். அதற்கான உழைப்பு எவ்வளவு உங்களி டம் உள்ளது. தியாகம் எவ்வ ளவு உள்ளது. சமுதாயத்திற்கு எவ்வளவு செய்தீர்கள். மக்களுக்கு சேவை பணியாற் றுபவர்களை அடையாளம் கண்டு ஆதரியுங்கள்.



அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்த தும் வேப்பனப்பள்ளி தொகுதி மலை கிராமங்களில் புதிதாக சாலைகள் அமைக்கப்படும். குறைந்த மின் அழுத்த பிரச்சினைகள் சரி செய்யப்படும். அதே போல சில இடங்களில் பட்டா வழங்குவதில் பிரச்சினை உள்ளது. அவை சரி செய்யப்படும்.மேலும் அதிமுகவின் சாதனைகளை அறிந்து வாக்கு சேகரிக்க செல்லும் இடமெல்லாம் மாற்றுக் கட்சியினர் அதிமுகவில் ஆர்வமுடன் இணைகின்றனர்.

பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்த எடப்பாடி பழனிசாமியை மீண்டும் முதல் அமைச்சராக்க இரட்டை இலை சின்னத்துக்கு வாக்களியுங்கள். இவ்வாறு அவர் கூறினார்.

# பர்கூரில் நாளை பிரம்மாண்ட பொதுக்கூட்டம்: கி. வீரமணி சிறப்புரை தே. மதியழகன் எம்.எல்.ஏ. அழைப்பு

கிருஷ்ணகிரி, ஏப்.14-

பர்கூர் சட்டமன்றத் தொகுதியில் நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு, மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் போட்டியிடும் திமுக வேட்பாளர், கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட கழக செயலாளர் தே. மதியழகன் எம்.எல்.ஏ. வை ஆதரித்து இன்று (14042026) மாலை 6.00 மணிக்கு பர்கூர் பேருந்து நிலையத்தில் பிரம்மாண்ட தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது.



இந்த பொதுக்கூட்டத்தில் கி. வீரமணி அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்ற உள்ளார். மேலும், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆசியுடன் நடைபெறும் இந்தக் கூட்டம், தேர்தல் பிரச்சாரத்தில் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

இதுகுறித்து தே. மதியழகன் எம்.எல்.ஏ. வெளியிட்டுள்ள அறிக்கையில், "பர்கூர் தொகுதியில் வெற்றியை உறுதி செய்யும் வகையில் நடைபெறும் இந்த பொதுக்கூட்டத்தில், கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த அனைத்து கழக நிர்வாகிகளும், கூட்டணி கட்சியினரும், பொதுமக்களும் அலைகடலென திரண்டு வந்து சிறப்பிக்க வேண்டும்" என அழைப்பு விடுத்துள்ளார்.

இந்த கூட்டம், தேர்தல் பிரச்சாரத்திற்கு மேலும் வலுசேர்க்கும் முக்கிய நிகழ்வாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.



# வைகை அணையிலிருந்து மேல்மங்கலம், ஜெயமங்கலம் கிராமங்களுக்கு குடிநீர் விநியோகம்

## அமமுக வேட்பாளர் கதிர்காமு வாக்குறுதி

தேனி, ஏப், 14-

தேனி மாவட்டம் பெரியகுளம் (தனி) சட்டமன்ற தொகுதியில் தேசிய ஜனநாயக கூட்டணியில் அங்கம் வகிக்கும் அம்மா மக்கள் முன்னேற்ற கழகத்தின் வேட்பாளர் மருத்துவர் கதிர்காமு ஏப்13ல் லட்சுமிபுரம், கிருஷ்ணபுரம், சருத்துப் பட்டி,கைலாசபட்டி,டி.ள்ளிப் பட்டி,தாமரைக்குளம், வடுகபட்டி,மேல்மங்கலம், ஜெயமங்கலம் உள்ளிட்ட பகுதிகளில் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார் . அப்போது பேசுகையில் "பொதுமக்களுக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் முறையாக செய்து கொடுப்பேன், சமுதாயக்கூடம் , விளையாட்டு திடல் மேல்மங்கலம், ஜெயமங்களம் பகுதியைச் சேர்ந்த மக்கள் பயன்பெறும் வகையில் வைகை அணையில் இருந்து உபரி நீர் எடுத்து பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்ய அனைத்து விதமான நடவடிக்கையும் எதிர்வரும் தேர்தலில் வெற்றி பெற்றால் நிச்சயம் செய்து கொடுப்பேன்" என வாக்குறுதி அளித்து குக்கர் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். இந்த வாக்கு சேகரிப்பின் போது அமமுக மாவட்ட செயலாளர் காசிமாயன், ஒன்றிய செயலாளர் ராமசாமி,அதிமுக ஒன்றிய செயலாளர் அன்னபிரகாஷ், பொதுக்குழு உறுப்பினர் தவமணி கருப்பசாமி, குள்ளபுரம் கணேசன், தேசிய ஜனநாயக கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சியை சேர்ந்த நிர்வாகிகள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர் .

# குன்னூர் பகுதியில் வாக்காளர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் நடைபெற்ற மிதிவண்டி பேரணியை மாவட்ட தேர்தல் அலுவலர் மாவட்ட ஆட்சித்தலைவர் கொடியசைத்து துவக்கி வைத்தார்

குன்னூர், ஏப்.14-

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 யை முன்னிட்டு, வாக்களிப்பதின் அவசியம் குறித்து வாக்காளர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் நடைபெற்ற மிதிவண்டி பேரணியை, மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு ஞிஷிஷிசி முன்பாக

கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின் படி, தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 யை முன்னிட்டு வாக்காளர்கள், இளம் வாக்காளர்கள், பழங்குடியினர்கள் உள்ளிட்ட அனைவரும் எதிர்வரும் ஏப்ரல் 23 ஆம் தேதி அன்று வாக்களிக்க வேண்டும் என்பதனை வலியுறுத்தியும், நேர்மையாக வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலும், கடந்த தேர்தலின் போது வாக்குபதிவுகள் குறைவாக பதிவான வாக்குசாவடி மையங்களின் அருகிலும், தொடர்ந்து விளையாட்டு போட்டிகள், ரங்கோலி கோலப்போட்டிகள், கலை நிகழ்ச்சிகள், உறுதிமொழி ஏற்றுக்கொள்ளுதல் போன்ற விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் நடத்தப்பட்டு வருகிறது.



அந்த வகையில் இன்றைய தினம் மிதிவண்டி பேரணி நடத்தப்பட்டது. இப்பேரணியானது ஞிஷிஷிசி மைதானத்தில் தொடங்கி லேக் வழியாக 7 கிலோமீட்டர் வரை நடைபெற்றது. இப்பேரணியில் சுமார் 100 க்கும் மேற்பட்ட நபர்கள் கலந்து கொண்டு, வாக்களிப்பதின் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார்கள்.

இப்பேரணியில் லெப்டினன்ட் கர்னல் ஷஹர்யார் ஹைதர் கிகிறி, ஞிஷிஷிசி வெல்லிங்டன், கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர் / கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அபிலாஷா கௌர் தேர்தல் நடத்தும் அலுவலர் / குன்னூர் சார் ஆட்சியர் சங்கீதா ஆவின் பொது மேலாளர் ராஜேஷ் குமார், தேசிய மிதிவண்டி போட்டி பதக்க வெற்றியாளர் த

ஸ்ரீநாத் லட்சுமிகாந்த் உட்பட பலர் கலந்து கொண்டனர்.





# மானாமதுரையில் தேர்தல் பிரச்சாரம்: உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரிப்பு

மானாமதுரை, ஏப்.14-

2026 சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு, மானாமதுரை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மேற்கு ஒன்றிய பகுதியில் நேற்று பொதுமக்களை சந்தித்து வாக்கு சேகரிப்பு நடைபெற்றது.

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் போட்டியிடும் வேட்பாளர் ஆ.தமிழரசி ரவிக்குமார் அவர்களுக்கு ஆதரவாக, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி நிர்வாகிகள் கிராமங்களில் வீடு தோறும் சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் கேட்டனர்.

இந்த பிரச்சாரத்தில் மாவட்ட பொருளாளர் மூ.ஆதிவளவன், மேற்கு ஒன்றிய செயலாளர் அருண்பாண்டியன், நகர செயலாளர் பாரதிராஜன், கிழக்கு ஒன்றிய செயலாளர் இளையராசா மற்றும் ஒன்றிய துணை செயலாளர் பிரபாகரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



# திருப்பூர் மாவட்ட ஆட்சியார். அரசியல் பிரதிநிதிகள் உடன் கூட்டம் நடைபெற்றது

திருப்பூர், ஏப்.14-

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026 முன்னிட்டு மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் டாக்டர்.மனிஷ் நாரணவரே தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் அனைத்து அரசியல் கட்சி பிரதிநிதிகளுடன் ஆலோசனைக்கூட்டம் மற்றும் தெற்கு சட்டமன்றத் தொகுதிக்கு வாக்குபதிவு இயந்திரங்கள் சமவாய்ப்பு முறையில் ஒதுக்கீடு செய்யும் பணி நடைபெற்றது.

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 திருப்பூர் மாவட்டத்திற்குட்பட்ட 101 தாராபுரம் (தனி), 102 காங்கேயம், 112 அவிநாசி( தனி), 113 திருப்பூர் (வடக்கு), 114 திருப்பூர் (தெற்கு), 115 பல்லடம், 125 உடுமலைப்பேட்டை, 126 மடத்துக்குளம் ஆகிய 8 சட்டமன்ற தொகுதிகளுக்கு நடைபெறவுள்ளதையொட்டி மாவட்டம் முழுவதும் 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நாள்தோறும் நடைபெற்று வருகிறது.

மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் டாக்டர்.மனிஷ் நாரணவரே தலைமையில் அனைத்து அரசியல் கட்சி பிரதிநிதிகளுடன் ஆலோசனைக்கூட்டம் மற்றும் தெற்கு சட்டமன்றத் தொகுதிக்கு வாக்குபதிவு இயந்திரங்கள் சமவாய்ப்பு முறையில் ஒதுக்கீடு செய்யும் பணி நடைபெற்றது. தொடர்ந்து, மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் டாக்டர்.மனிஷ் நாரணவரே மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள வாக்குபதிவு இயந்திரங்கள் இருப்பறையிலிருந்து திருப்பூர் தெற்கு சட்டமன்றத் தொகுதி வாக்குசாவடிகளுக்கு வாக்குபதிவு இயந்திரங்களை அனுப்பி வைக்கும் பணியினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் க.கார்த்திகேயன், மாநகராட்சி ஆணையாளர் எம்.பி.அமித் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) கண்ணன், தனி வட்டாட்சியர் (தேர்தல்) கனகராஜ் மற்றும் அரசியல் கட்சி பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



■ தேமுதிக கேப்டனின் ஆசி பெற்ற வேட்பாளர் எஸ். நாகஜோதி அவர்களுக்கு திண்டுக்கல் கிழக்கு மாவட்டம் நிலக்கோட்டை தெற்கு ஒன்றிய அவைத் தலைவர் ஜி செல்வம் ஒன்றிய இளைஞரணி .கி. கோபால் எஸ் நாகஜோதி அவர்களுக்கு உதய சூரியன் சின்னத்தில் வாக்குகள் சேகரித்தனர் மற்றும் பலர் கலந்து கொண்டனர்

# மானாமதுரை நகராட்சி பேருந்து நிலையத்தில் அத்துமீறும் டூவீலர்கள்: ஆக்கிரமிப்பில் நடைபாதை பயணிகள் அவதி!

மானாமதுரை ஏப்.14-

சிவகங்கை மாவட்டத்தின் முக்கிய போக்குவரத்து முனையமான மானாமதுரை நகராட்சி பேருந்து நிலையம், தற்போது பயணிகள் பயன்படுத்த முடியாத அளவிற்கு இருச்சக்கர வாகனங்களின் ஆக்கிரமிப்பில் சிக்கித் தவிக்கிறது. இது குறித்து சமூக ஆர்வலர்களும் பொதுமக்களும் கடும் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

புகைப்படம் உணர்த்தும் அவலம்:

வெளியாகியுள்ள புகைப்படங்களில் காணப்படுவது போல, பயணிகள் நிழலில் ஒதுங்கி நிற்கவும், பேருந்துக்காகக் காத்திருக்கவும் அமைக்கப்பட்ட



நடைபாதை மற்றும் தூண்களுக்கு இடைப்பட்ட பகுதிகளில் இருச்சக்கர வாகனங்கள் சட்டவிரோதமாக நிறுத்தப்பட்டுள்ளன.

பயணிகளுக்கு இடமில்லை: பேருந்து நிலையத்தின் நடைபாதையை வாகனங்கள் ஆக்கிரமித்துள்ளதால், முதியவர்கள் மற்றும் கையில் குழந்தையுடன் வரும் பெண்கள் பேருந்துக்காக வெயிலில் நிற்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

விதிமீறல்: பேருந்துகள் வந்து செல்ல வேண்டிய தடங்களிலும், பயணிகள் நடக்கும் இடங்களிலும் வாகனங்கள் நிறுத்தப்படுவதால் பேருந்து நிலையமே வாகனக் காப்பகம் போலக் காட்சியளிக்கிறது.

வாகனக் காப்பகம் எங்கே?

"மானாமதுரை பேருந்து நிலையத்திற்கு என்று தனியாக வாகனக் காப்பகம் (Parking Stand) இருந்தும், அங்கு வாகனங்களை நிறுத்தாமல் வசதிக்காகப் பேருந்து நிலையத்தின் உள்ளேயே நிறுத்திச் செல்வது வாடிக்கையாகிவிட்டது. இதற்கு நகராட்சி நிர்வாகம் எந்தவிதக் கட்டுப்பாடும் விதிக்கவில்லை," என உள்ளூர் மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

முக்கிய கோரிக்கைகள்:

1. ஆணையாளர் நடவடிக்கை: நகராட்சி ஆணையாளர் உடனடியாக ஆய்வு மேற்கொண்டு, நடைபாதையில் நிறுத்தப்படும் வாகனங்களைப் பறிமுதல் செய்ய வேண்டும்.

2. நிரந்தரத் தீர்வு: பயணிகள் நடக்கும் பகுதியில் வாகனங்கள் நுழையாதவாறு தடுப்புகள் (Bollards) அமைக்கப்பட வேண்டும்.

3. அபராதம்: விதிமீறி வாகனங்களை நிறுத்துபவர்களுக்குக் கடுமையான அபராதம் விதிக்கப்பட வேண்டும்.

நிர்வாகத்தின் மெத்தனப் போக்கு: தினமும் ஆயிரக்கணக்கான பயணிகள் வந்து செல்லும் இந்த பேருந்து நிலையத்தில், அடிப்படை ஒழுங்கு முறையைக்கூடப் பராமரிக்காதது நகராட்சி நிர்வாகத்தின் மெத்தனப்போக்கைக் காட்டுவதாக அமைகிறது. இந்தச் செய்தி வெளியான பிறகாவது ஆணையாளர் மற்றும் காவல்துறை அதிகாரிகள் இணைந்து ஒரு நிரந்தரத் தீர்வை எடுப்பார்களா? என்பதே பொதுமக்களின் எதிர்பார்ப்பு.

# 'பர்கூர் தொகுதியில் ரூ.400 கோடி திட்டங்களை நிறைவேற்றியுள்ளேன்' திமுக வேட்பாளர் மதியழகன் எம் எல் ஏ உரை

கிருஷ்ணகிரி, ஏப்.14-

கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் சட்டசபை தொகுதிக்கு உட்பட்ட சின் னசெட்டிப்பள்ளி, அழகியபுதூர், தட் ரஹள்ளி, பி.ஆர்.ஜி., மாதேப்பள்ளி, சந்தனூர், பண்ணந்தார் உள்ளிட்ட, 30க்கும் மேற்பட்ட கிராமங்களில், தி.மு.க., வேட்பாளர் மதியழகன் எம். எல். ஏ., பிரசாரம் மேற்கொண்டார்.





அப்போது அவர் பேசியதாவது:

தமிழக முதல்வர் ஸ்டாலின் பொற் கால ஆட்சியை வழங்கியுள்ளார். விடியல் பயணம் மூலம் தாய்மார்கள் மாதம், 800 ரூபாய் முதல், 2,000 ரூபாய் வரை சேமித்துள்ளார்கள். தற்போது, உரிமை தொகை, 1,000 ரூபாயிலிருந்து 2000 ரூபாய் வழங்க உள்ளோம். 8,000 ரூபாய் கூப்பனை பண்டிகை காலங்களில் பயன்படுத் தினால், 16,000 ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் வாங்கலாம்.

கடந்த, 5 ஆண்டுகளில், 2 லட்சம் வீடுகள் கட்டிக்கொடுத்ததை போல், வரும் ஆட்சியில், 10 லட்சம் வீடு கட்டி தரப்படும். வரும், திராவிட மாடல் '2.0' ஆட்சி சூப்பர் ஜெட் வேகத்தில் செல்லும் சூப்பர் ஆட்சியாக இருக்கும். ஆனால் இ.பி.எஸ்., ஆட்சியில் இது போல திட்டங்கள் உண்டா. மத்திய அரசுடன் சேர்ந்து, 100 நாள் வேலையை இ.பி.எஸ்., முடக்கியுள்ளார்.

மத்திய அரசு தமிழகத்திற்கு வழங்க வேண்டிய, 2,000 கோடி ரூபாயை தராமல் நிறுத்தி வைத்துள்ளது. பல லட்சம் கோடி ரூபாய் சம்பாதித்த, இ.பி.எஸ்., வருமான வரித்துறை, அமலாக்கத்துறை ரெய்டுகளுக்கு பயந்து, மத்திய அரசிடமும், மோடி, அமித்ஷாவிடம் அடிமையாகி, அ.தி.மு.க.,வையும் அடகு வைத்துள்ளார். நம்மை கரம் பிடித்து தூக்கும் ஸ்டாலின் வேண்டுமா, அடிமை யாக்கும் இ.பி.எஸ்., வேண்டுமா என, மக்கள் சிந்திக்க வேண்டும். கடந்த, 5 ஆண்டுகளில் எம்.எல்.ஏ., வாக இந்த பர்கூர் தொகுதிக்கு, 400 கோடி ரூபாய் திட்டங்களை செயல்படுத்தி உள்ளேன். பர்கூர் பஸ் ஸ்டாண்ட், ஸ்டேடியம், குடிநீர் வசதிகள் செய் யப்பட்டுள்ளன. ராமர்கொட்டாயில் ரேஷன் கடை, வேடிகொட்டாயில் ஆர்.ஓ., கேட்டுள்ளீர்கள். தேர்தல் வெற்றிக்கு பின் செய்து தரப்படும். இவ்வாறு, அவர் பேசினார்.

மேலும் நேற்று பர்கூர் நகரப் பகுதி, டெக்ஸ்டைல் மார்க்கெட் உள்ளிட்ட இடங்களில் வீதி வீதியாக சென்று உதய சூரியன் சின்னத்திற்கு வாக்குகளை சேகரித்தார். மேலும் சாலையோரம் இருந்த டீ கடையில் பணியாரம் சுட்டுக்கொடுத்து வாக்குகளை சேகரித்தார்.



■ கிருஷ்ணகிரி அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில், அண்ணல் பி.ஆர். அம்பேத்கர் பிறந்தநாளை முன்னிட்டு சமத்துவ நாள் உறுதிமொழிமுதல்வர் மரு. க. சத்தியபாமா தலைமையில், அனைத்து மருத்துவர்களும், பணியாளர்களும் உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர்.ஜாதி வேறுபாடுகளை ஒழித்து சமத்துவ சமுதாயத்தை உருவாக்க உறுதிபூண்டனர்.மருத்துவர்கள், நிர்வாக அலுவலர்கள், செவிலியர்கள் உள்ளிட்டோர் இதில் பங்கேற்றனர்.

# வால்பாறை அருகே விபத்தில் சிக்கியவருக்கு உதவிய திமுக வேட்பாளர் சுதாகர்

வால்பாறை, ஏப்.14-

வால்பாறை சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளர் சுதாகர் சோலையார் அணை பகுதியில் சாலை விபத்தில் சிக்கியவருக்கு உதவி செய்தார். சோலையார் அணை அருகே பைக் மற்றும் லாரி மோதியதில் பலத்த காயமடைந்தவர்கள் சாலையில் தவித்துக் கொண்டிருந்தனர். இந்நிலையில் அங்கு வந்த திமுக வேட்பாளர் உடனடியாக தனது வாகனத்தை நிறுத்தி, காயமடைந்தவர்களை பாதுகாப்பாக மீட்டு அருகிலுள்ள மருத்துவமனைக்கு அனுப்ப நடவடிக்கை எடுத்தார்.




காயமடைந்தவர்களுக்கு உடனடி உதவி அளிக்கப்பட்டதால், அவர்களின் உயிர் காக்கப்பட்டது என கூறப்படுகிறது. வேட்பாளரின் இந்த மனிதநேய செயல் அங்கு இருந்த பொதுமக்கள் மத்தியில் பாராட்டைப் பெற்றதுடன், அதை பதிவு செய்த வீடியோ சமூக வலைதளங்களில் பரவி பெரும் வரவேற்பையும் ஏற்படுத்தியுள்ளது. இச்சம்பவம் தேர்தல் சூழலில் மனிதாபிமானத்தின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துவதாக பலரும் கருத்து தெரிவித்து வருகின்றனர்

# திருப்பூர் மாவட்ட மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் இல்லத்திற்கு சென்று வாக்கு சேகரிக்கும் பணி

திருப்பூர் ஏப்.14-

திருப்பூர் மாவட்டம் தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026 முன்னிட்டு மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.மனிஷ் நாரணவரே இ.ஆ.ப., அவர்கள் இன்று (12.04.2026) திருப்பூர் தெற்கு சட்டமன்றத் தொகுதி ஷெரிப் காலனி மற்றும் பல்லடம் சட்டமன்றத் தொகுதி இடுவம்பாளையம் பகுதிகளில் 85 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் இல்லத்திற்கு சென்று வாக்கு சேகரிக்கும் பணியினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026, 85 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு அவர்களது விருப்பத்தின் பேரில் இல்லத்திற்கே சென்று வாக்குகளை சேகரிக்க இந்தியத் தேர்தல் ஆணையம் ஏற்பாடு செய்துள்ளது. இதன் படி ஏற்கனவே படிவம் 12ஞில் விண்ணப்பம் செய்த திருப்பூர் மாவட்டத்திற்குட்பட்ட 8 சட்டமன்ற தொகுதியில் 5382 மூத்த குடிமக்கள் வாக்காளர்களும், 1440 மாற்றுத்திறனாளி வாக்காளர்களும் வாக்களிக்க தங்களது விருப்பத்தினை 03.04.2026 தேதி வரை விண்ணப்பங்களை வழங்கி உள்ளனர் ஏற்கனவே படிவம்12ஞில் விண்ணப்பிக்காதவர்கள் தபால் வாக்களிக்க இயலாது. மேற்படி வாக்காளர்களிடம் வாக்குகளை சேகரிக்க வாக்கு பதிவு அலுவலர்கள் தலைமையின் கீழ் திருப்பூர் மாவட்டத்திற்குட்பட்ட 8 சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட தாராபுரம் சட்டமன்றத் தொகுதிக்கு 24 குழுக்களும், காங்கேயம் சட்டமன்றத் தொகுதிக்கு 20 குழுக்களும், அவினாசி சட்டமன்றத் தொகுதிக்கு 24 குழுக்களும், திருப்பூ(வடக்கு) சட்டமன்றத் தொகுதிக்கு 8 குழுக்களும், திருப்பூர்(தெற்கு) சட்டமன்ற தொகுதிக்கு 10 குழுக்களும், பல்லடம் சட்டமன்றத் தொகுதிக்கு 19 குழுக்களும், உடுமலைபேட்டை சட்டமன்ற தொகுதிக்கு 27 குழுக்களும், மடத்துகுளம் சட்டமன்றத்தொகுதிக்கு 14 குழுக்களும் என மொத்தம் 156 நுண் பார்வையாளர் அடங்கிய குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இக்குழுக்கள் நேற்று 13.04.2026 இன்று 14.04.2026 ஆகிய தேதிகளில் மேற்படி வாக்காளர்களின் இல்லத்திற்கே சென்று வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகிறன்றனர். இந்த வசதியினை பயன்படுத்தி ஏற்கனவே விருப்பம் தெரிவித்த மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் அவர்களது இல்லங்களில் இருந்தே வாக்கு செலுத்தலாம்.

அந்த வகையில் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் டாக்டர்.மனிஷ் நாரணவரே திருப்பூர் தெற்கு சட்டமன்றத் தொகுதி ஷெரிப் காலனி மற்றும் பல்லடம் சட்டமன்றத் தொகுதி இடுவம்பாளையம் பகுதிகளில் 85 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் இல்லத்திற்கு சென்று வாக்கு சேகரிக்கும் பணியினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161